Praise the Lord

அருமையான கனிகள்



Pr. J. லாசர்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

அருமையான கனிகள்

ஆசிரியர்: **பாஸ்டர் J. லாசர்**
F. G. P. C. தெருவிளை, மாத்தூர்,
அருவிக்கரை - 629 177,
(Via) திருவட்டார்,
குமரிமாவட்டம்.

அருமையான கனிகள் (Tamil)

First Edition - December 2010

Publishers	:	M/s. Full Gospel Literature Service Centre
Typesetting & Design	:	Full Gospel Print System
Printing	:	Evans Printers, Jacobs Compound, Marthandam.
No. of Pages	:	32
Price	:	Rs. 10/-

Praise The Lord

☎ (04651) 252756
252856

"For the Perfecting of the Saints, for the work of the Ministry for the edifying of the body of Christ." (Eph. 4 : 12)

FULL GOSPEL PENTECOSTAL CHURCH
KADAMALAIKUNTU
P.B. No. 3, MEKKAMANDAPAM - 629 166, K.K.DIST.

Estd. 1933 Reg. S.No. 64/95

அணிந்துரை

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்!

அருமையான பாஸ்டர் **J. லாசா** அவர்கள் எங்கள் ஸ்தாபனத்தில் ஒரு மூத்த போதகர். மிகுந்த ஆவிக்குரிய அனுபவங்களும், ஊழிய அனுபவங்களும் நிறைந்தவர். ஆவியில் அனலாய் பிரசங்கிப்பவர்.

இப்போது கர்த்தர் தனக்குத் தந்த நல்ல வெளிப்பாடு களையும், ஆவிக்குரிய கருத்துக்களையும் புத்தகங்களாக எழுதுகிறார். அவரது கையால் எழுதப்பட்ட இந்த **"அருமையான கனிகள்"** என்ற இப்புத்தகம் அநேகர் கிறிஸ்துவின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்கு பயனுள்ளதாய் இருக்குமென்பதில் சந்தேகமில்லை.

வாசித்து பயனடையுங்கள்!

போதகருடைய இலக்கியப்பணி மேலும் சிறக்க, பயன்பட அனைவரும் ஜெபியுங்கள்.

அல்லேலூயா!

அன்புடன்,
I. வினில் சதீஷ்,
(தலைமை போதகர்)
பூரண சுவிசேஷ பெந்தெகொஸ்தே சபை.

கடமலைக்குன்று,
03-08-2010.

உள்ளே . . .

	பக்கம்
அருமையான கனிகள்	
1. புதிய பழைய கனிகள்	1
2. மனந்திரும்புதலுக்கேற்ற கனி	2
3. நீதியின் கனி	4
4. பழுத்த கனிகள்	6
5. முதற்கனி	9
6. மிகுந்த கனிகள்	11
7. ஆவியின் கனி	12
8. நல்ல கனிகள்	14
9. கனி கொடாத மரம்	19
10. களிப்பாக்கும் கனி	22
11. பொய்யின் கனி	25
12. நற்கனி	26

அருமையான கனிகள்

புதிய பழைய கனிகள்

அதிகாலையிலே திராட்சத்தோட்டங்களுக்குப் போவோம், திராட்சக்கொடி துளிர்த்து அதின் பூ மலர்ந்ததோ என்றும் மாதளஞ்செடிகள் பூ பூத்ததோ என்றும் பார்ப்போம். அங்கே என் நேசத்தின் உச்சிதங்களை உமக்குத் தருவேன்.

தூதாயீம் பழம் வாசனை வீசும். நமது வாசல்களண்டையிலே புதியவைகளும், பழையவைகளுமான சகலவித அருமையான கனிகளுமுண்டு. என் நேசரே அவைகளை உமக்கு வைத்திருக்கிறேன். (உன். 7 : 12, 13)

மணவாட்டி நேசத்தின் உச்சிதங்கள், பழையதும் புதியதுமான அருமையான கனிகள் முதலியவற்றை நேசருக்கு வைத்திருக்கிறாள். நாமும் இதைப் போன்றே அருமையான கனிகளை நேசருக்குக் கொடுக்க வேண்டும். இயேசு இவைகளைப் பார்த்து சந்தோஷப்படுவார்.

மணவாட்டியின் தோட்டத்தைப் பார்த்து உன் தோட்டத்தில் அருமையான கனிமரங்கள் நிறைந்திருக்கிறது என்று மணவாளன் கூறுகிறார். இந்த அருமையான கனி மரங்கள் விசுவாசிகளைக் குறிக்கிறது. தோட்டத்தில் எல்லாவிதச் செடிகளும் அருமையான கனிமரங்களும் காணப்படும்போது, இயேசு எவ்வளவோ சந்தோஷப்படுகிறார். இன்று நாம் பார்க்கும்போது, சில மரங்களில் கனியே இல்லை. சில மரங்களில் கசப்புக்கனிகள் காணப்படுகிறது. ஆனால், மணவாட்டியின் தோட்டத்தில் எல்லா மரங்களும் ஒன்றுபோல

நாம் கனி கொடுக்க இயேசுவில் நிலைத்திருக்க வேண்டும். கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து இலையுதிராதிருக்கிற மரத்தைப் போலிருப்பான்; அவன் செய்வதெல்லாம் வாய்க்கும் (சங். 1 : 2, 3). கர்த்தர் மேல் நம்பிக்கை வைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் தண்ணீரண்டையிலே நாட்டப்பட்டதும், கால்வாய் ஓரமாகத் தன் வேர்களை விடுகிறதும், உஷ்ணம் வருகிறதைக் காணாமல் இலை பச்சையாயிருக்கிறதும், மழை தாழ்ச்சியான வருஷத்திலும் வருத்தமின்றி தப்பாமல் கனி கொடுக்கிறதுமான மரத்தைப் போலிருப்பான் (எரே. 17 : 7, 8).

பரிசுத்த ஆவியால், கிடைக்கும் கனிகள் **இந்த நதி பரிசுத்த ஸ்தலத்திலிருந்து பாய்கிறபடியால், மாதந்தோறும் புது கனிகளைக் கொடுத்துக்கொண்டே இருக்கும். அவைகளின் கனிகள் கெடுவதுமில்லை; இலைகள் உதிர்வதுமில்லை** (எசே. 47 : 12). ஆவியின் கனியோ அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் இவைகளாகும். ஆவியின் கனி சகல நற்குணத்திலும், நீதியிலும், உண்மையிலும் விளங்கும் (எபே. 5 : 9). தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்திலிருந்து நீக்கப்பட்டு, அதற்கேற்ற கனிகளைத் தருகிற ஜனங்களுக்கு கொடுக்கப்படும் (மத். 21 : 43).

தேவன் தமக்கு கீழ்ப்படிகிறவர்களுக்குத் தந்தருளின பரிசுத்த ஆவியும் சாட்சி என்றார்கள் (அப். 5 : 32). தாழ்மையும், உண்மையும், கீழ்ப்படிதலும் உள்ளவர்களுக்கு கர்த்தர் பரிசுத்த ஆவியை இலவசமாகக் கொடுக்கிறார். அது மட்டுமல்ல; தாகமும், வாஞ்சையும், விருப்பமும் உள்ள மக்களுக்கு கர்த்தர் கொடுக்கிறார். நாம் அவருக்கேற்ற கனிகளைக் கொடுக்கும்போது, அவர் பரிசுத்த ஆவியைக் கொடுக்கிறவராயிருக்கிறார். இருளின் அதிகாரத்தினின்று

நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்தரிக்கிறோம் (கொலோ. 1 : 12).

கனியின் ருசி இயேசுவிலிருந்து கிடைக்கிறது. இயேசுவை கன்மலையென்று சொல்லப்படுகிறது (I கொரி. 10 : 4). கன்மலையிலிருந்து தண்ணீர் கிடைக்கிறது; தேன் கிடைக்கிறது (உபா. 32 : 13). இயேசுவைப் போல மதுரமும், இனிமையும், இன்பமும் இந்த உலகத்தில் ஒன்றுமில்லை. மணவாட்டி இதை அனுபவித்தாள். **உமது நேசம் திராட்சரசத்தைப் பார்க்கிலும் இன்பமானது. உமது பரிமளத் தைலங்கள் இன்பமான வாசனை உள்ளவைகள்** (உன். 1 : 2). இவைகள் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைக் குறிக்கிறது. உன். 1 : 16-ல் பார்க்கும்போது, இந்த உலகத்தில் இயேசுவை இன்பமானவராக மணவாட்டி கண்டுகொண்டாள். அவள் சொல்லுகிறாள்: நீர் எனக்கு இன்பமானவர்.

ஞானத்திலும் கனிகள் அடங்கியிருக்கிறது (யாக். 3 : 17). பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ள தாயும்; பின்பு சமாதானமும், சாந்தமும், இணக்கமுள்ள தாயும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும், பட்சபாதமில்லாததாயும், மாயமற்றதாயும் இருக்கிறது.

நீதியின் கனி

நீதியாகிய கனியானது சமாதானத்தை நடப்பிக்கிறவர் களாலே சமாதானத்திலே விதைக்கப்படுகிறது. அது மிகுந்த பலனைக் கொடுக்கிறது (யாக். 3 : 18). இயேசு சொல்லும் போது: சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள் (மத். 5 : 9).

நாம் இந்த உலகத்தில் நீதியையும், சமாதானத்தையும், நீதியின் கனிகளையும் விதைக்க வேண்டும். சரீர விதையைப் பற்றி சொல்லப்படுகிறது: விதை வகை ஒவ்வொன்றிற்கும் அதற்கு தேவன்

தமது சித்தத்தினபடியே மேனியைக் கொடுக்கிறார். பூமியிலே கனி தரும் விதை இருக்கிறது. அதுபோல ஆத்மீக விதை இருக்கிறது. நாம் நித்திய ஜீவனை அறுக்கிறவர்களாகக் காணப்பட வேண்டுமானால், ஆவிக்கென்று நாம் விதைக்க வேண்டும்.

இயேசுவின் சரீரத்தை அப்போது இருந்த அரசாங்கமும், ஜனங்களும் கனவீனமுள்ளதாய் எண்ணி னார்கள்.

யோசேப்பு அந்த சரீரத்தை எடுத்து தூயதான மெல்லியத் துப்பட்டியிலே சுற்றி, தன்னுடைய கல்லறையில் அடக்கம் பண்ணினான். II கொரி. 15 : 43-ல் சொல்லப்பட்டபடியே, மகிமையுள்ளவராய் எழுந்தார். இந்த உலகத்திலும் அநேக தேவப்பிள்ளைகளை இந்த உலகம் கனவீனமுள்ளதாய் எண்ணுகிறது. மகிமையுள்ளதாய் எழுந் திருப்பார்கள். இயேசுவின் சாயலைப் பெற்று சதாகாலமும் இயேசுவோடு இருப்பார்கள். இயேசு நம்மில் கனி நிலைத்திருக்க வேண்டுமென்று விரும்புகிறார். நீங்கள் போய் கனி கொடுக்க வேண்டும். இயேசுவின் விருப்பம்: நாம் இயேசு கிறிஸ்துவினால் வருகிற நீதியின் கனிகளால் நிறையப்பட வேண்டும். நாம் கனிகளால் நிறைந்தால் தான் மற்றவர் களுக்கு கனி கொடுக்க முடியும்.

மோசே யோசேப்பை ஆசீர்வதிக்கும்போது, சூரியன் பக்கு வப்படுத்தும் அருமையான கனிகளினாலும் என்று கூறியிருக்கிறார். சூரியன் ஆவிக்குரியப்பிரகாரம் இயேசுவை குறிக்கிறது. இயேசு நமக்கு நீதியின் சூரியனாயிருக்கிறார். அவர் உலகம் முழுவதுக்கும் வெளிச்சமாகவும், கனி கொடுக்கிறவருமாயிருக்கிறார். இயேசுவாகிய நீதியின் சூரியனில் நிலைத்திருப்பவர்கள் அருமையான கனிகளைக் கொடுப்பார்கள்.

மணவாட்டியைப் பார்க்கும்போது சந்திரனைப் போல் அழகும், சூரியனைப் போல் பிரகாசமும், கொடிகள் பறக்கும் படையைப் போல் கெடியுமுள்ளவளாய் அருணோதயம் போல் உதிக்கிற இவள் யார்?

(உன். 6 : 10). மணவாட்டி சொல்லும் போது, வாடையே எழும்பு, தென்றலே வா; கந்தப்பிசின்கள் வடிய என் தோட்டத்தில் வீசு; என் நேசர் தம்முடைய தோட்டத்துக்கு வந்து தமது அருமையான கனிகளைப் புசிப்பாராக. தமிழில் வாடையே எழும்பு என்று சொல்லப் படுகிறது. மலையாள வேதப்புத்தகத்தில் வடதிசைகாற்றே உணருக. கர்த்தர் இருக்கிற இடம் வடதிசையின் சீயோன் பர்வதம் (சங். 48 : 2). அங்கேயிருந்து தான் காற்று வீசுகிறது. இந்தக் காற்றை வீசும்படியாக மணவாட்டி விரும்புகிறாள்.

பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப் போகிறவரும், பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும்போது, அவர் என்னைக் குறித்து சாட்சி கொடுப்பார் (யோவா. 15 : 26). இந்தக் காற்று தோட்டத்தில் வீசிக்கொண்டே இருக்க வேண்டும்.

யோபு 37 : 21-ல் வாசிக்கும்போது; இப்போதும் காற்று வீசி, ஆகாயமண்டலங்களிலுள்ள மப்பு நீங்கப் பண்ணியிருக்கிற சமயத்தில் வடக்கேயிருந்து பொன் மயமான காந்தி வருகிறபோது, ஆகாயமண்டலத்திலே பிரகாசிக்கிற சூரியனை முதலாய் ஒருவரும் நோக்கிப் பார்க்கக்கூடாதே. கர்த்தரின் பரிசுத்தத்தையும், பிரகாசத்தையும் பற்றி பெரிதாகச் சொல்லப்படுகிறது. நம்முடைய வாழ்க்கையில் பாடுகளும், துன்பங்களும், சஞ்சலங்களும் உண்டாகும். அப்போது பரிசுத்த ஆவியில் நிறைந்தால் கவலைகளும், பாடுகளும் நீங்கிப்போகிறது. கர்த்தரிலே நிலைத்திருந்து மிகுந்த கனிகளையும் கொடுக்கிறார்கள்.

பழுத்த கனிகள்

மணவாளனாகிய இயேசு சொல்லும்போது, பள்ளத்தாக்கில் பழுத்த கனிகளைப் பார்க்கவும், திராட்சச்செடிகள் துளிர் விட்டு மாதளஞ்செடிகள் பூத்ததா என்று அறியவும் வாதுமைத் தோட்டத் துக்கும் போனேன். நினையாததுக்கு முன்னே என் ஆத்துமா என்னை

அம்மினதாபின் இரதங்களுக்கு ஒப்பாக்கிற்று. பள்ளத்தாக்கின் அனுபவம் மிகுந்த மனத்தாழ்மையைக் குறிக்கிறது. இயேசு கூறும்போது, நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாயிருக்கிறேன் என்கிறார (மத். 11 : 29). ஆவிக்குரிய ஜீவியத்தில் தன்னைத் தாழ்த்துகிற அனுபவம் மிகுந்த உயர்வுக்குக் கொண்டு வரும். பள்ளத்தாக்கின் பழுத்தக் கனிகள் என்று கூறியிருக்கிற இந்த வார்த்தையை நாம் பார்க்கும்போது, இயேசுவின் வருகையில் சேர்த்துக்கொள்ளும் பூரணப்பட்ட பரிசுத்தவான்களைக் குறிக்கிறது. அம்மினதாபின் இரதங்களுக்கு ஒப்பாக்கிற்று (உன். 6 : 12). உம்மிலே பெலன் கொள்ளுகிற மனுஷனும் தங்கள் இருதயங்களில் செவ்வையான வழிகளைக் கொண்டிருக்கிறவர்களும் பாக்கியவான்கள். அழுகையின் பள்ளத்தாக்கை உருவ நடந்து அதை நீரூற்றாக்கிக் கொள்ளு கிறார்கள். மழையும் குளங்களை நிரப்பும். அவர்கள் பலத்தின் மேல் பலம் அடைந்து, சீயோனிலே தேவ சந்நிதியில் வந்து காணப் படுவார்கள் (சங். 84 : 5 - 7). இயேசுவும் சிலுவையின் மரண பரியந்தம் தன்னைத் தாழ்த்தினார். பிதா எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தினார் (பிலி. 2 : 8, 9).

உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை எப்போதும் தேவனுக்கு செலுத்தக்கடவோம். உதடுகளின் கனி மதுரமாயிருக்க வேண்டுமானால், வாய் மதுருமாயிருக்க வேண்டும். வாய் மதுர மாயிருக்க வேண்டுமானால், இயேசுவின் பாதத்தில் உட்கார வேண்டும். அதின் நிழலில் வாஞ்சையாய் உட்காருகிறேன். அதின் கனி என் வாய்க்கு மதுரமாயிருக்கிறது என்று மணவாட்டி கூறுகிறாள். வாய் கனியாயிருக்கும்போது, நாம் துதிக்கும் துதி கர்த்தருக்கு மதுரமான கனியாயிருக்கும். கனி மரங்களே கர்த்தரைத் துதியுங்கள் என்று சங்கீதம் 148 : 9-ல் கூறப்பட்டிருக்கிறது. நல்ல மரம் நல்ல கனி கொடுக்கும். நல்ல கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியில் போடப்படும் என்று மத்தேயு 7 : 19-ல் கூறப்பட்டிருக்கிறது. என் வாய் ஆனந்தக் களிப்புள்ள உதடுகளால் உம்மைப் போற்றும் (சங். 63 : 5).

சங். 71 : 8 - என் வாய் உமது துதியினாலும், நாள்தோறும் உமது மகத்துவத்தினாலும் நிறைந்திருப்பதாக. இப்படிப்பட்ட துதியில் தான் கர்த்தர் வாசம் செய்வார். துதி அவருக்கு வாசனையாயிருக்கும். விசுவாசிகள் தப்பாமல் கனி கொடுக்கிறவர்களாயிருக்க வேண்டும். கர்த்தரை அநேகக் காரியங்களில் மகிமைப்படுத்துகிறார். நீங்கள் மிகுந்த கனிகளைக் கொர்டுப்பதினால், என் பிதா மகிமைப்படுவார். மிகுந்த கனிகளைக் கொடுத்து மகிமைப்படுத்துகிறது முக்கியமான காரியம். இயேசுவுக்கு சீஷரும் ஆவார்கள். இயேசுவின் சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும் படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும் படியாகவும் விரும்புகிறார். இன்றைக்கு நாம் பார்க்கும்போது, நாம் நல்ல கனியென்று நினைத்து கொடுக்கிறோம். அவர் பார்வைக்கு கசப்பும், புளிப்புமாயிருக்கிறது. ஆகையினால் ஆவியானவருடைய கிரியை குறைந்துகொண்டே வருகிறது. எப்படியும் நாம் இனிமையான கனிகளைக் கொடுப்போம்.

நாம் மிகுதியான கனிகளை கொடுக்கும்போது,

(1) நம்மை சுத்தம்பண்ணுகிறார்.

(2) ஜீவத்தண்ணீர் பாய்ந்துகொண்டே இருக்கும்.

(3) ஆத்மீக ஆகாரம் அதிகமாய் கிடைக்கும்.

(4) நீர்ப்பாய்ச்சலானத் தோட்டத்தைப் போல் இருப்பாய்.

(5) வற்றாத நீரூற்றைப் போல் இருப்பாய்.

(6) தப்பாமல் கனி கொடுத்துக்கொண்டே இருப்போம்.

(7) புதிதான கனி கொடுத்துக்கொண்டே இருப்போம்.

(8) கனிகளில் வாசனை வீசும் கனிகளும் உண்டு.

(9) என்றைக்கும் நிலைத்திருக்கும் கனிகளும் உண்டு.

கர்த்தர் அதை விரும்புகிறார்.

முதற்கனி

கர்த்தர் சொல்லும்போது, உன் நிலத்தின் முதல் விளைச்சலில் முதற்கனியை உன் தேவனாகிய கர்த்தருடைய ஆலயத்தில் கொண்டுவருவாயாக. பரிசுத்தவான்கள் மத்தியிலும் ஆவியின் முதற்பலன்கள் சிங்காசனத்தில் போய் நிற்கிறது. இயேசு சொல்லும்போது, மரமானது அதின் கனியினால் அறியப்படும். நல்ல மனுஷன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லதை எடுத்துக் காட்டுகிறான். பவுல் சொல்லும்போது, இந்த பொக்கிஷத்தை மண் பாண்டங்களில் பெற்றுக்கொண்டோம் (II கொரி. 4 : 7). அவருக்குள் ஞானம், அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங் களெல்லாம் அடங்கியிருக்கிறது (கொலோ. 2 : 3).

மணவாட்டியைப் பற்றி சொல்லும்போது, உன் நாபி திராட்சரசம் நிறைந்த வட்டக்கலசம் போல் இருக்கிறது. உன் மூக்கின் வாசனை கிச்சிலிப் பழங்கள் போலவும் இருக்கிறது. உன் தொண்டை என் நேசர் குடிக்கையில் மெதுவாய் இறங்குகிறதும், உறங்குகிறவர்களின் உதடுகளை பேசப்பண்ணுகிறதுமான நல்ல திராட்சரசத்தைப் போல் இருக்கிறது (உன். 7 : 2, 9). உன் முக்காட்டின் நடுவே உன் கன்னங்கள் வெடித்த மாதளம் பழம் போல் இருக்கிறது. மணவாட்டியின் ஒவ்வொரு அவயவயங்களைப் பார்க்கும் போது பழங்களுக்கும், கனிகளுக்கும் ஒப்பிட்டுப் பேசுகிறார். இயேசுவில் நிலைத்திருக்கும்போது, எல்லா அவயவயங்களும் கனிகளாக மாறுகிறது. ஜெயங்கொள்ளுகிறவன் எவனோ, அவனுக்கு தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவ விருட்சத்தின் கனியைப் புசிக்கக் கொடுப்பேன் (வெளி. 2 : 7).

தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி: நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம் என்று சொல்லுகிறார்.

அருமையான கனிமரங்களை சபையாகியத் தோட்டத்தில் வைக்கிறார். நித்தியத்திலேயும் ஜீவ விருட்சம் காணப் படுகிறது.

பிதாவாகிய தேவன் கொடுக்கிறதெல்லாம் கனியுள்ளதாயிருக்கிறது. பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயும்; பின்பு சமாதானமும், சாந்தமும், இணக்கமுள்ளதாயும், இரக்கத்தாலும், நற்கனிகளாலும் நிறைந்ததாயும், பட்சபாதமில்லாததாயும், மாயமற்றதாயுமிருக்கிறது.

நீதியாகிய கனியானது சமாதானத்தை நடப்பிக்கிற வர்களாலே சமாதானத்திலே விதைக்கப்படுகிறது (யாக். 3 : 17, 18). நாம் வசனத்தைப் பார்க்கும்போது, அன்பிலிருந்து தான் கனி உண்டாகிறது. தேவன் அன்பாகவே இருக்கிறார். அவர் கிரியைகளெல்லாம் அன்பான கிரியை. உலகம் சாத்தானால் சீர்கெட்டுப் போனாலும், உலகத்தை அன்புகூர்ந்து ஒரே பேறான குமாரனை உலகத்துக்கு அனுப்பினார். அவர் தீயோர் மேலும் நல்லோர் மேலும் சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப் பண்ணுகிறார் (மத். 5 : 45).

ஆகையால் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக் கடவீர்கள் (மத். 5 : 48). இப்போது பரிசுத்தாவி யினாலே நமக்கு அருளப்பட்ட ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருப்பதால், அந்த நம்பிக்கை வெட்கப்படுத்தாது.

நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப் படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள் (I யோவா. 3 : 1).

அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடையப் பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார் (யோவா. 1 : 12). கோடான கோடி தூதர்கள் இருக்கிறார்கள்; அவர்களுக்கு அப்பா பிதாவே! என்று கூப்பிட உரிமையில்லை. நமக்கு அப்பா பிதாவே! என்று கூப்பிட உரிமையைத் தந்திருக்கிறார்.

மிகுந்த கனிகள்

நான் மெய்யான திராட்சச்செடி. ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால்; அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான் என்று இயேசு கூறுகிறார். நீங்கள் மிகுந்த கனிகளை கொடுப்பதினால், என் பிதா மகிமைப் படுவார். எனக்கும் சீஷராயிருப்பீர்கள் (யோவா. 15 : 8). அவர் தம்முடைய ஜீவனைத் நமக்காகக் கொடுத்ததினால், அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம். நாமும் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்க கடனாளிகளாக இருக்கிறோம் (I யோவா. 3 : 16). நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய் பலப்படவும், விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும் நீங்கள் அன்பிலே வேரூன்றி நிலை பெற்றவர்களாகி சகல பரிசுத்தவான்களோடும் கூட கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும் என்று சொல்லப் படுகிறது (எபே. 3 : 16 - 18).

தேவப்பிள்ளைகளுக்கு புதிய அபிஷேகத்தையும், புதிய ஆசீர்வாதத்தையும் கொடுக்கிறார். நாம் அதிகக் கனி கொடுக்கும் போது, புதிய புதிய ஆசீர்வாதங்களைக் கொடுத்துக்கொண்டே இருப்பார். கனி கொடுக்காவிட்டால், தேவனுடைய இராஜ்யத்தை எடுத்து கனி கொடுக்கிற மக்களுக்கு கொடுப்பார். இயேசு உலகம் முழுவதுக்கும் கனி கொடுக்கிறவராயிருக்கிறார். உலகம் முழுவதுக்கும் வெளிச்சமாயிருக்கிறார். உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி (யோவா. 1 : 9).

மணவாட்டி சொல்லும்போது; இவரே மதுமானவர், இன்பமானவர். இவருடைய மதுரமும், இனிமையும் மாறாதது; குறையாதது. ஆகையினால், மணவாட்டி இயேசுவை நேசிக்கிறாள். உலக அன்பும், மனித அன்பும் மாறிப்போகும். இயேசுவின் அன்பு மாறாததும்

நித்தியமுமா யிருக்கிறது. அன்பு ஒருக்காலும் ஒழியாததும், அழியாதது மாயிருக்கிறது. இயேசுவும் தம்முடையப் பிள்ளைகள் மேல் முடிவு பரியந்தம் அன்பு வைக்கிறவர். நாமும் முடிவுபரியந்தம் இயேசுவை நேசிக்கிறவர்களாயிருக்க வேண்டும்.

ஆவியின் கனி

பரிசுத்த ஆவியின் மூலமாய் நமக்கு கனி கிடைக்கிறது. நம்முடைய ஆவி பரிசுத்தமாகும்போதும், ஆவியில் அன்பு பெருகும்போதும் கனி உண்டாகிறது. ஆவியின் கனியோ அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை.

எசேக்கியேல் தீர்க்கதரிசியின் புஸ்தகத்தில் பார்க்கும் போது, இந்த நதியோரமாய் நடத்திக்கொண்டு போனார். நான் நடந்துவருகையில், இதோ நதி ஓரத்தில் இக்கரையிலும் அக்கரையிலும் வெகு திரளான விருட்சங்கள் இருந்தது. இந்த நதி பரிசுத்த ஆவியைக் குறிக்கிறது. இயேசு சொல்லும்போது வேதவாக்கியம் சொல்லுகிறபடி, என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத் திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் (யோவா. 7 : 38). இந்த விருட்சங்கள் விசுவாசிகளைக் காட்டுகிறது. இந்தத் தண்ணீர் வந்தபடியினால் ஏராளமான மச்சங்கள் உண்டாயிருக்கும். இது ஆத்துமாக்களைக் குறிக்கிறது. இந்த நதி போகும் இடமெல்லாம் யாவும் ஆரோக்கியப்பட்டு பிழைக்கும். நதியோரமாய் அதின் இக்கரையிலும், அக்கரையிலும் புசிப்புக்கான சகலவித விருட்சங்களும் வளரும். அவைகளின் இலைகள் உதிர்வது மில்லை. அவைகளின் கனிகள் கெடுவதுமில்லை. அவைகளுக்குப் பாயும் தண்ணீர் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து பாய்கிறபடியினால் மாதந்தோறும் புது கனிகளைக் கொடுத்துக்கொண்டே இருக்கும். அவைகளின் கனிகள் புசிப்புக்கும், அவைகளின் இலைகள் அவிழ்தத்துக்கு மானவைகள் (எசே. 47 : 12).

யோவான் அப்போஸ்தலர் பார்க்கும்போது, பின்பு பளிங்கைப் போல் தெளிவான ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான நதி தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டு வருகிறதை எனக்குக் காண்பித்தான். நகரத்து வீதியின் மத்தியிலும், நதியின் இருகரையிலும் பன்னிரெண்டுவிதமான கனிகளைத் தரும் ஜீவ விருட்சம் இருந்தது. அது மாதந்தோறும் தன் கனியைக் கொடுக்கும். அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியமடைகிறதற்கு ஏதுவானவைகள் (வெளி. 22 : 1, 2).

ஜீவ விருட்சத்தின்மேல் அதிகாரமுள்ளவர்களாவதற்கும், வாசல்கள் வழியாய் நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும் அவருடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள் பாக்கிய வான்கள்.

கனி எப்போதும் கொடுத்துக்கொண்டிருக்க இயேசுவில் நிலைத்திருக்க வேண்டும். கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து இலையுதிராதிருக்கிற மரத்தைப் போலிருப்பான். அவன் செய்வதெல்லாம் வாய்க்கும் (சங். 1 : 2, 3).

கர்த்தர் மேல் நம்பிக்கை வைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாக வைத்துக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் தண்ணீரண்டையிலே நாட்டப்பட்டதும், கால்வாய் ஓரமாய் தன் வேர்களை விடுகிறதும், உஷ்ணம் வருகிறதைக் காணாமல் இலை பச்சையாயிருக்கிறதும், மழைத் தாழ்ச்சியான வருஷத்திலும் வருத்தமின்றி தப்பாமல் கனி கொடுக்கிறதுமான மரத்தைப் போலிருப்பான் (எரே. 17 : 7, 8). பசியுள்ளவனிடத்தில் உன் ஆத்துமாவை சாய்த்து, சிறுமைப்பட்ட ஆத்துமாவைத் திருப்தியாக்கினால் அப்பொழுது இருளில் உன் வெளிச்சம் உதித்து உன் அந்தகாரம் மத்தியானத்தைப் போலாகும். கர்த்தர் நித்தமும் உன்னை நடத்தி, மகா வறட்சியானக் காலங்களில் உன் ஆத்துமாவைத் திருப்தியாக்கி, உன் எலும்புகளை

நிணமுள்ளதாக்குவார். நீ நீர்ப்பாய்ச்சலானத் தோட்டத்தைப் போலவும், வற்றாத நீரூற்றைப் போலவும் இருப்பாய் (ஏசா. 48 : 10, 11).

நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை; நான் உங்களைத் தெரிந்துகொண்டேன். நீங்கள் என் நாமத் தினாலே பிதாவைக் கேட்டுக்கொள்வதெதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத் தக்கதாய் நீங்கள் போய் கனி கொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும் படிக்கும் நான் உங்களை ஏற்படுத்தினேன் (யோவா. 15 : 16). நீதிமான் பனையைப் போல் செழித்து, லீபனோனிலுள்ள கேதுருவைப் போல் வளருவான். கர்த்தருடைய ஆலயத்திலே நாட்டப்பட்டவர்கள் எங்கள் தேவனுடையப் பிரகாரங்களில் செழித்திருப்பார்கள். அவர்கள் முதிர்வயதிலும் கனி தந்து புஷ்டியும், பசுமையுமாயிருப்பார்கள் (சங். 92 : 12 - 15).

தேவனுக்கு மகிமையும், துதியும் உண்டாகும்படி இயேசு கிறிஸ்தவினால் வருகிற நீதியின் கனிகளினால் நிறைந்தவர்களாய் இருக்க வேண்டும். இயேசுவிலே ஒருபோதும் கனி குறைந்து போகிறதில்லை. அவரிலே நிலைத்திருக்கிற பிள்ளைகளிடத்திலும், கனிகள் குறைந்து போகிறதில்லை. கனி கொடுத்துக் கொண்டிருப் பார்கள். கர்த்தர் சந்தோஷப்படுவார்; ஜனங்களும் சந்தோஷப்படு வார்கள். எப்போதும் கனி கொடுத்துக்கொடுத்துக்கொண்டே இருப்போம்.

நல்ல கனிகள்

நல்ல மரம் நல்ல கனிகளைக் கொடுக்கும். மரத்தை அதின் கனிகளினால் அறியலாம் என்று கர்த்தர் சொல்லுகிறார். நல்ல கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும். ஆனால் அவர் பரிசுத்தமாயிருக்கும்போது, கிளைகளும் பரிசுத்தமாயிருக்கும். கர்த்தரின் அன்பை வேருக்கு ஒப்பிட்டு சொல்லப்படுகிறது. நீங்கள் அன்பிலே வேரூன்றி, நிலைபெற்றவர்களாக இருக்கும்போது, சகல கனிகளையும் கொடுப்பார்கள். கனிகள் நிலைத்திருக்கிறது. என்னாலே உன் கனி உண்டாயிற்றென்று எப்பிராயீம் சொல்லுவான் (ஓசி. 14 : 8).

நான் இஸ்ரவேலுக்கு பனியைப் போலிருப்பேன். அவன் லீலிபுஷ்பத்தைப் போல் மலருவான். லீபனோனைப் போல் வேரூன்றி நிற்பான். அவன் கிளைகள் ஓங்கிப் படரும். அவன் அலங்காரம் ஒலிவமரத்தினுடைய அலங்காரத்தைப் போலவும், அவனுடைய வாசனை லீபனோனுடைய வாசனையைப் போலவும் இருக்கும். அவன் நிழலில் குடியிருக்கிறவர்கள் திரும்புவார்கள். தானிய விளைச்சலைப் போல செழித்து, திராட்சச்செடிகளைப் போல படருவார்கள். அவன் வாசனை லீபனோனுடைய திராட்சரசத்தின் வாசனையைப் போல் இருக்கும் (ஓசி. 14 : 5 - 7).

என் திராட்சத்தோட்டம் எனக்கு முன்பாக இருக்கிறது. சாலொமோனே உமக்கு அந்த ஆயிரமும், அதின் கனியை காக்கிறவர்களுக்கு இருநூறும் சேரும். சபையாகிய திராட்சத் தோட்டத்துக்கு காவல்காரர்களை, கர்த்தர் நியமித்துவைக்கிறார். பவுல் அப்போஸ்தலர் சொல்லும் போது, ஆகையால் உங்களைக் குறித்தும் தேவன் தம்முடைய சுய இரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட தமது சபையை மேய்ப்பதற்கு பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையும் குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள் (அப். 20 : 28).

சாத்தான் கனிகளையும், தோட்டத்தையும் கெடுக்கப் பார்க்கிறான். அருமையான கனிகளைக் காக்க ஊழியர்களை நியமித்து வைக்கிறார். அதின் கனியைக் காக்கிறவர்களுக்கு கர்த்தர் பிரதிபலன் கொடுப்பார்.

ஆவியின் கனி, சகல நற்குணத்திலும், நீதியிலும், உண்மையிலும் விளங்கும் (எபே. 5 : 9).

பரிசுத்தாவியின் பெலத்தினாலே உங்களுக்கு நம்பிக்கை பெருகும்படிக்கும், நம்பிக்கையின் தேவன் விசுவாசத்தினால் உண்டாகும் சந்தோஷத்தினாலும் சமாதானத்தினாலும் உங்களை நிரப்புவாராக. என் சகோதரரே! நீங்கள் நற்குணத்தில் நிறைந்தவர்களும், சகல

அறிவினாலும் நிரப்பப்பட்டவர்களும் புத்தி சொல்ல வல்லவர்களு மாயிருக்கிறீர்களென்று நானும் உங்களைக் குறித்து நிச்சயித் திருக்கிறேன் (ரோ. 15 : 13, 14).

அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும், அமைதலு முள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது. அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது (I பேது. 3 : 4). யாக்கோபு குணசாலியும், கூடாரவாசியுமாய் இருந்தான்.

நீ குணசாலி என்பதை என் ஜனமாகிய ஊராரெல்லாரும் அறிவார்கள் (ரூத். 3 : 11).

அநேகம் பெண்கள் குணசாலிகளாயிருந்ததுண்டு. நீயோ, அவர்கள் எல்லாருக்கும் மேற்பட்டவள் என்று அவளைப் புகழுகிறான்.

குணசாலியான ஸ்திரீ தன் புருஷனுக்குக் கிரீட மாயிருக்கிறாள் (நீதி. 12 : 4). ஆவியின் கனிகள் நற் குணங்களில் விளங்குகிறது. அதைப் போன்றே அன்பிலி ருந்தும் கனிகள் உண்டாகிறது. நற்கிரியை களிலிருந்தும் கனிகள் உண்டாகிறது. இவை எல்லாவற்றிலும் அன்பு தான் பெரியது. ஒன்பதுவிதமான கனிகளும் அன்பிலிருந்து தான் உண்டாகிறது. ஆகையால், அன்பில் பூரணப்படும்போது தான் இந்தக் கனிகள் பலன் கொடுக்கிறது. பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும். அன்பில் தைரியம் இருக்கிறது. தேவனுக்கு முன்பாக நிற்க தைரியம் கிடைக்கிறது. வருகையில் அவருக்கு முன்பாக வெட்கப்பட்டுப் போகாமல் இருக்க அவரில் நிலைத்திருங்கள். ஒரு தேவப்பிள்ளை நல்ல கனி கொடுக்கும்போது, ஜனங்கள் கனியைத் தேடி வருவார்கள். ஒரு சபை நல்ல கனி கொடுக்கும்போது, ஜனங்கள் தேடி வருவார்கள். இந்நாட்கள் கனி குறையும் காலமாயிருக்கிறது. அன்பும், விசுவாசமும், பரிசுத்தமும் குறைந்துபோகும் காலமாயிருக்கிறது. ஆனால் இயேசுவின் அன்போ மாறாததாயிருக்கிறது. அது அழியாததும், ஒழியாதது மாயிருக்கிறது. கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மைப் பிரிப்பவன் யார்

என்று பவுல் அப்போஸ்தலர் சொல்லுகிறார் (ரோ. 8 : 35 - 39). தேவனுடைய அன்பை விட்டு பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்.

அப்போஸ்தலர் பவுல் சொல்லும்போது, எவன் திராட்சத் தோட்டத்தை உண்டாக்கி அதின் கனியில் புசியாதிருப்பான்? எவன் மந்தையை மேய்த்து அதின் பாலைச் சாப்பிடாதிருப்பான்? (I கொரி. 9 : 7)

ஊழியர்கள் சபைகளை எவ்வளவோ கஷ்டப்பட்டு ஸ்தாபிக்கிறார்கள். விசுவாசிகள் இதைப் பார்க்கும்போது, ஊழியக்காரர்களுக்கும் தேவனுக்கும் மற்ற ஜனங்களுக்கும் எவ்வளவோ கனி கொடுக்கிறவர்களாயிருக்க வேண்டும். ஊழியரைத் துக்கப்படுத்தும் போது, ஊழியரின் ஆசீர்வாதம் குறைகிறது. உங்களை நடத்துகிறவர்கள் உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியால், அவர்கள் துக்கத்தோடே அல்ல; சந்தோஷத்தோடே அதை செய்யும்படி அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள். அவர்கள் துக்கத்தோடே அப்படி செய்தால், அது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்க மாட்டாதே.

நீ ஆரோனோடும், அவன் குமாரரோடும் சொல்ல வேண்டியது என்னவென்றால், நீங்கள் இஸ்ரவேல் புத்திரரை ஆசீர்வதிக்கும்போது, அவர்களைப் பார்த்து சொல்ல வேண்டியதாவது: கர்த்தர் உன்னை ஆசீர்வதித்து, உன்னைக் காக்கக்கடவர். கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரகாசிக்கப்பண்ணி, உன்மேல் கிருபையாயிருக்கக்கடவர். கர்த்தர் தம்முடைய முகத்தை உன் மேல் பிரசன்னமாக்கி, உனக்கு சமாதானம் கட்டளையிடக் கடவர் என்பதே (எண். 6 : 23 - 27).

கர்த்தர் கனிகளையும் ஆசீர்வதிக்கிறார்; அது ஆசீர்வாதமாயிருக்கும். அப்போது அது அநேகருக்குப் பிரயோஜனமாயிருக்கும். நேபுகாத்நேச்சாரின் ஆளுகையை கர்த்தர் எடுத்துக்காட்டாகக் கூறுகிறார். அவரை ஒரு விருட்சத்துக்கு ஒப்பிட்டுப் பேசுகிறார். இதோ தேசத்தின் மத்தியிலே மிகவும் உயரமான ஒரு விருட்சத்தைக்

கண்டேன். அந்த விருட்சம் வளர்ந்து பலத்து, தேசத்தின் எல்லை பரியந்தமும் காணப்படத்தக்கதாக அதின் உயரம் வானபரியந்தம் எட்டினது. அதின் இலைகள் நேர்த்தியும், அதின் கனிகள் மிகுதியுமாயிருந்தது. எல்லா ஜீவனுக்கும் அதில் ஆகாரம் உண்டாயிருந்தது. அதின் கீழே வெளியின் மிருகங்கள் நிழலுக்கு ஒதுங்கினது. அதின் கொப்புகளில் ஆகாயத்துப்பட்சிகள் தாபரித்து, சகலப் பிராணிகளும் அதினால் போஷிக்கப்பட்டது (தானி. 4 : 10 - 13). அவன் இருதயம் மேட்டிமை கொண்டு, அதெல்லாம் சிதறடிக்கப் பட்டது. ஆனாலும் பிற்காலத்தில் உணர்ந்து முந்தின நிலைமைக்கு வந்தான்.

அவ்வேளையில் என் புத்தி எனக்குத் திரும்ப வந்தது. என் இராஜ்யபாரத்தின் மேன்மைக்காக என் மகிமையும், என் முகக்களையும் எனக்குத் திரும்பி வந்தது. என் மந்திரிமாரும், என் பிரபுக்களும் என்னைத் தேடி வந்தார்கள். என் இராஜ்யத்திலே நான் ஸ்திரப்படப்பட்டேன். அதிக மகத்துவமும் எனக்கு கிடைத்தது. ஆகையால், நேபுகாத்நேச்சாராகிய நான் பரலோகத்தின் இராஜாவைப் புகழ்ந்து, உயர்த்தி மகிமைப்படுத்துகிறேன். அவருடைய கிரியை களெல்லாம் சத்தியமும், அவருடைய வழிகள் நியாயமு மானவைகள். அகந்தையாய் நடக்கிறவர்களைத் தாழ்த்த அவராலே ஆகும் என்று எழுதினான் (தானி. 4 : 36, 37).

இப்போதுள்ள ஊழியக்காரரும், விசுவாசிகளும் கர்த்தரால் உபயோகப்படும்போது மனமேட்டிமையும், பெருமையும், நான் என்கிற எண்ணமும் வராதபடி காத்துக் கொள்ளவும். இயேசுவிலே நிலைத்திருந்து மிகுந்த கனி கொடுக்கிறவர்களாக மாற வேண்டும். கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களைப் பற்றிக் கூறும்போது, இஸ்ரவேல் பலனற்றத் திராட்சச்செடி. அது தனக்குத் தானே கனி கொடுக்கிறது. அவன் தன் கனியின் திரளுக்கு சரியாய் பலிபீடங்களைத் திரளாக்குகிறான் (ஓசி. 10 : 1).

கனி கொடாத மரம்

கர்த்தரின் பொறுமையை சொல்லிமுடியாது. கனி கொடாத மரத்தை வெட்ட நினைக்கும்போது, இயேசு இந்த வருடம் இந்த மரம் நிற்கட்டும். உரம் போட்டு கனி கொடுக்குமா? என்று பார்ப்போம். நமக்காக எவ்வளவோ பரிந்துபேசுகிறார். மூன்று வருஷமாகக் கனி தேடி வருகிறார். அந்த மரம் கனி கொடுக்கவில்லை. அவர் தோட்டக்காரரை நோக்கி: இதோ, இந்த மூன்று வருஷமாக இந்த அத்தி மரத்திலே கனியைத் தேடிவருகிறேன்; ஒன்றையும் காணவில்லை. இதை வெட்டிப்போடு, நிலத்தையும் கெடுக்கும் என்றான். அதற்கு அவன்: ஐயா! இந்த வருஷமும் இருக்கட்டும். நான் சுற்றிலும் கொத்தி எரு போடுவேன். கனி கொடுத்தால் சரி, கொடாவிட்டால் இனிமேல் இதை வெட்டிப்போடலாம் என்று சொன்னான். விசுவாசிகளை மனந்திரும்பத் தவணை கொடுக்கிறார். கனி கொடுக்கவும் தவணை நீட்டிக் கொடுக்கிறார். ஆகையால், பிரியமானவர்களே! நாம் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ள வேண்டும். நம் ஆத்துமாவைக் காத்துக்கொள்ள வேண்டும். பரலோக இராஜ்யத்தில் பொக்கிஷங்களை சேர்த்துக்கொள்ள வேண்டும்.

கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்; நான் உயர்ந்த கேதுருவின் நுனி கிளைகளில் ஒன்றை எடுத்து, அதை நடுவேன். அதின் இளங்கிளையிலுள்ள கொழுந்துகளில் இளசாயிருக்கிற ஒன்றைக் கொய்து அதை உயரமும், உன்னத முமான ஒரு பர்வதத்தின் மேல் நாட்டுவேன். இஸ்ரவேலின் உயரமானப் பர்வதத்திலே அதை நாட்டுவேன். அது கொப்புகளை விட்டு, கனி தந்து மகிமையான கேதுருவாகும். அதின் கீழே சகலவிதப் பட்சி ஜாதிகளும் தங்கி, அதின் கிளைகளின் நிழலிலே தாபரிக்கும் (எசே. 17 : 22, 23).

ஏசாயா 5-ம் அதிகாரத்தில் பார்க்கும்போது, என் நேசருக்கு மகா செழிப்பான மேட்டிலே ஒரு திராட்சத் தோட்டம் உண்டு. மேடான இடம் என்று சொல்லும்போது, அது உன்னதமான இடத்தைக் குறிக்கிறது.

ஆவிக்குரியப பிரகாரம் நாம் பார்க்கும்போது, கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடே கூட உட்காரவும் செய்தார். உன்னதங்களில் அவரைத் துதியுங்கள்; கனி மரங்களே கர்த்தரைத் துதியுங்கள். உன்னதங்களில் இருக்கிறவர்களுக்கு உன்னதத்தின் ஆசீர்வாதம். அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதத்தின் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார் (எபே. 1 : 3).

கர்த்தர் தம்முடைய பரிசுத்தவான்களைப் பல வரிசையிலும் வைக்கிறார். உயர்ந்த பர்வதத்தில் நடுகிறார். கர்த்தருடைய நோக்கம், உன்னதமான இடத்தில் இருந்து கொண்டு கனி கொடுக்க வேண்டும். உன்னதமான இடத்தில் கனி கொடுக்கிறது ஒரு பெரும் பாக்கியம். பள்ளத்தாக்கில் கனி கொடுக்கிற அனுபவம் இருக்கிறது. பள்ளத்தாக்கிலே பழுத்தக் கனிகளைப் பார்க்கவும் நேசர் போகிறார். இஸ்ரவேல் ஜனங்களை இந்த உலகத்தில் எல்லா ஜாதிகளிலும் மேன்மையாக வைக்கிறார். அதைப் போன்றே பரிசுத்தவான்களையும் மேன்மையுள்ளவர்களாக வைக்கிறார் ஆவிக்குரியப்பிரகாரம் நாம் பார்க்கும்போது.

பின்பு நான் பார்த்தபோது, இதோ சீயோன் மலையின் மேல் ஆட்டுக்குட்டியானவரையும், அவரோடே கூட அவருடைய பிதாவின் நாமம் தங்கள் நெற்றிகளில் எழுதப் பட்டிருந்த இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேரையும் நிற்கக் கண்டேன். அவர்கள் சிங்காசனத்துக்கு முன்பாக வும், நான்கு ஜீவன்களுக்கு முன்பாகவும், மூப்பர்களுக்கு முன்பாகவும் புதுப்பாட்டைப் பாடினார்கள். அந்தப்பாட்டு வேறொருவரும் கற்றுக்கொள்ளக்கூடாதிருந்தது (வெளி. 14 : 1 - 5).

கனி கொடுக்கிற கொடி எதுவோ என்று இயேசு சொல்லுகிறார். பெண்களோ, ஆண்களோ, சிறியவர்களோ, பெரியவர்களோ யாரானாலும் கனி கொடுக்கும்போது இயேசுவின விருப்பம் என்னவென்றால், இன்னும் நாம் அதிகக் கனிகளைக் கொடுக்க வேண்டும்

என்பதே. இதை நாம் பார்க்கும்போது, எவ்வளவு அதிகமாக நாம் பரிசுத்தப் படுகிறோமோ, அவ்வளவுக்கு அதிகம் கனி கொடுக்க முடியும். இயேசுவோ மிகுந்த கனிகளை எதிர்பார்க்கிறார். சாத்தான் நம்முடைய கனியைக் கசப்பாக மாற்ற நினைக்கிறான். நாம் இயேசுவில் உறுதியாய் நிலைத்திருக்கும்போது, நம்முடைய கனி மாறாது.

இயேசு சொன்னார்: என்னில் நிலைத்திராவிட்டால், கனி கொடுக்கமாட்டீர்கள். இயேசு ஜீவத்தண்ணீர் ஊற்றாயிருக் கிறார். ஒருநாளும் வாடிப்போகாது. மழை இல்லாவிட்டால், செடிகள் வதங்கி மாண்டுபோகிறது. (யோவேல் 1 : 10 - 14)

நாம் நம்முடைய வாழ்க்கையில் முடிவுபரியந்தம் கனி கொடுக்கிறவர்களாயிருப்போம். அதிகக் கனி கொடுக்கும் போது, பிதா சந்தோஷப்படுகிறார்; இயேசுவும் சந்தோஷப் படுகிறார்; ஜனங்களும் சந்தோஷப்படுகிறார்கள். நாம் அவரைத் தரிசிக்கப் பரிசுத்தம் வேண்டும். விசுவாசம் பரிசுத்தமாக இருக்க வேண்டும். கனி கொடுக்கிறவர்கள் கர்த்தரை மகிமைப்படுத்துகிறார்கள். நாம் இந்த உலகத்தில் மாத்திரமல்ல. நித்தியத்திலேயும் கர்த்தரை மகிமைப் படுத்திக்கொண்டேயிருப்போம். அங்கேயும் கனி ஒழிந்துபோகாது. ஜீவ விருட்சம் இருக்கிறது. அது மாதந்தோறும் புது கனியைக் கொடுத்துக்கொண்டே இருக்கும். இது என்ன ஆனந்தம்! நித்தியகால சந்தோஷத்தை நினைக்கும்போது, அது ஒரு பெரும் பாக்கியம் என்று கருதுகிறோம். தேவனாகிய கர்த்தர் பிரகாசிப்பார். அவர்கள் சதாகாலங்களிலும் அரசாளுவார்கள். எப்படியாவது எல்லோரும் இந்த சந்தோஷத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

கனி கொடாதிருக்கிற கொடி என்று இயேசு சொல்லும்போது:

என்னில் கனி கொடாதிருக்கிற கொடி எதுவோ, அதை அவர் அறுத்துப்போடுகிறார். (யோவா. 15 : 2)

ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்ட கொடியைப் போல அவன் எறியுண்டு உலர்ந்து போவான். அப்படிப்பட்ட

வைகளைச் சேர்த்து அக்கினியிலே போடுகிறார்கள். அவைகள் எரிந்துபோம். நான் உன்னை முற்றிலும் நற்கனி தரும் உயர்குலத் திராட்சச்செடியாக நாட்டினேன். நீ எனக்குக் காட்டுத் திராட்சச்செடியின் ஆகாத கொடிகளாய் மாறிப்போனது என்ன? (எரே. 2 : 21).

களிப்பாக்கும் கனி

திராட்ச ரசம் ஜீவனுள்ளோரைக் களிப்பாக்கும் (பிர. 10 : 19). நம்முடைய கனியும் அனேகரைக் களிப்பாக்க வேண்டும். அது மட்டுமல்ல, புது திராட்சரசம் கன்னிகைகளை வளர்க்கும் (சக. 9 : 17).

மனுஷனுடைய இருதயத்தை மகிழ்ச்சியாக்கும் திராட்ச ரசத்தையும், அவனுக்கு முகக்களையை உண்டுபண்ணும் எண்ணெயையும், மனுஷனுடைய இருதயத்தை ஆதரிக்கும் ஆகாரத்தையும் விளைவிக்கிறார் (சங். 104 : 15). பிரசங்கி சொல்லும்போது, உன் வஸ்திரங்கள் எப்பொழுதும் வெள்ளையாயும், உன் தலைக்கு எண்ணெய் குறையாத தாயும் இருப்பதாக (பிர. 9 : 8). ஆவிக்குரிய முறையில் நாம் சிந்திக்கும்போது, நம் ஆவிக்குரிய வஸ்திரம் எப்போதும் வெண்மையாயிருக்க வேண்டும். வெண்மை பரிசுத்தத்தைக் காட்டுகிறது. எண்ணெய் என்று சொல்லும்போது, பரிசுத்தாவியின் அபிஷேகத்தில் எப்போதும் நிரம்பியிருக்க வேண்டும். தாவீது கூறும்போது, என் தலையை எண்ணெயால் அபிஷேகம் பண்ணுகிறீர். என் பாத்திரம் நிரம்பிவழிகிறது. நம்முடைய கனி அனேகரைக் களிப்பாக்குவது மட்டுமல்ல. அனேகம் ஆவிக்குரிய கன்னிகைகளை வளர்க்க வேண்டும். சபையை ஒரு கன்னிகைக்கு ஒப்பிட்டுப் பேசுகிறார். புது ரசத்தைப் புது துருத்திகளில் வார்த்து வைப்பார்கள். அப்பொழுது இரண்டும் பத்திரப்பட்டிருக்கும்.

வஸ்திரம் வெண்மையாயிருந்தால் இயேசுவோடு நடக்கலாம், இயேசுவோடு சஞ்சரிக்கலாம். இந்நாட்களில் அன்பாகிய ரசம் குறைந்துகொண்டேவருகிறது. நம்முடைய கனியாகிய ரசம் அனேகரைக் களிப்பாக்கட்டும். அனேகரை ஆவிக்குரிய வளர்ச்சியில்

நடத்தவதற்காக நாம் அன்பிலும், பரிசுத்தத்திலும் நிறைந்தவர்களாகக் காணப்பட வேண்டும்.

மணவாட்டி மணவாளனாகிய இயேசுவுக்கு கந்தவர்க்க மிட்ட திராட்சரசத்தையும், என் மாதளம்பழ ரசத்தையும் உமக்குக் குடிக்கக் கொடுப்பேன் என கூறுகிறாள். கந்தவர்க்கம் மிகவும் வாசனையாயிருக்கும். இயேசுவின் உள்ளத்தை மகிழப்பண்ணுகிறவளாய் இருக்கிறாள். மணவாளன் சொல்லும்போது, மனமகிழ்ச்சியை உண்டாக்கும் என் பிரியமே! நீ எவ்வளவு ரூபவதி! நீ எவ்வளவு இன்பமுள்ளவள் (உன். 7 : 6). மணவாளனுக்கு என்ன பிரியம் என்று மணவாட்டிக்குத் தெரியும். அதன்படி அவருக்குக் குடிக்கக் கொடுக்கிறாள்.

அதிகாலையிலே திராட்சத்தோட்டங்களுக்குப் போவோம். திராட்சக்கொடி துளிர்த்து, அதின் பூ மலர்ந்ததோ என்றும், மாதளஞ்செடிகள் பூ பூத்ததோ என்றும் பார்ப்போம். அங்கே என் நேசத்தின் உச்சிதங்களை உமக்குத் தருவேன் (உன். 7 : 12). இன்னும் மணவாளனுக்கு கனி கொடுத்து சந்தோஷப்படுத்த வேண்டும். தூதாயீம் பழம் வாசனை வீசும். நமது வாசல்களண்டையில் புதியவைகளும், பழையவை களுமான சகலவித அருமையான கனிகளும் உண்டு. என் நேசரே அவைகளை உமக்கு வைத்திருக்கிறேன் (உன். 7 : 13). இன்னும் நாம் பார்க்கும்போது, எப்படியெல்லாம் மணவாளனை சந்தோஷப்படுத்த வேண்டும் என்று கூறுகிறாள். வாடையே! எழும்பு. தென்றலே! வா. கந்தப் பிசின்கள் வடிய என் தோட்டத்தில் வீசு. என் நேசர் தம்முடைய தோட்டத்துக்கு வந்து தமது அருமையான கனிகளைப் புசிப்பாராக (உன். 4 : 16).

என் சகோதரியே! என் மணவாளியே! நான் என் தோட்டத்தில் வந்தேன். என் வெள்ளைப்போளத்தையும், என் கந்தவர்க்கங்களையும் சேர்த்தேன். என் தேன்கூட்டை என் தேனோடு புசித்தேன். என் திராட்சரசத்தை என் பாலோடும் குடித்தேன். அவர் புசித்தப் பிறகு

பேசுகிறார்: சிநேகிதரே! புசியுங்கள்; பிரியமானவர்களே! குடியுங்கள், பூர்த்தியாய் குடியுங்கள் (உன். 5 : 1). நாம் இந்த உலகத்திலே இயேசுவுக்குப் பிரியமானதைச் செய்து அவரோடு இருக்க வேண்டும்.

அத்திமரத்தைக் காக்கிறவன் அதன் கனியைப் புசிப்பான் (நீதி. 27 : 18). நானே மெய்யான திராட்சச்செடி. இயேசு சீஷர்களைப் பார்த்து கூறும்போது, மேலும் எனக்கு நேரிட்ட சோதனைகளில் என்னோடு கூட நிலைத்திருந்தவர்கள் நீங்களே (லூக். 22 : 28). என் மாம்சத்தைப் புசித்து என் இரத்தத்தை பானம்பண்ணுகிறவன் என்னிலே நிலைத்திருக் கிறான். நானும் அவனிலே நிலைத்திருக்கிறேன் (யோவா. 6 : 56). மறுபடியும் ஆண்டவர் தாமே கூறுகிறார்: என் உபதேசத்தில் நிலைத்திருந்தால், மெய்யாகவே என் 'சீஷராயிருப்பீர்கள் (யோவா. 8 : 31). அவருடைய அன்பில் நிலைத்திருங்கள் (யோவா. 15 : 9). நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால்; நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ, அது உங்களுக்கு செய்யப்படும். இப்படி நாம் அவரில் நிலைத்திருந்தால், மிகுதியான கனிகளை கொடுக்கலாம். வேர் பரிசுத்தமாயிருந்தால், கிளைகளும் பரிசுத்தமாயிருக்கும். இயேசுவின் அன்புதான் வேர். அன்பிலே வேரூன்றி நிலைபெற்றவர்களாய் (எபே. 3 : 17) இருங்கள்.

நீதிமானுடைய வேர் கனி கொடுக்கும். நீதிமானுடைய வேர் அசையாது (நீதி. 12 : 3). யூதா வம்சத்தாரில் தப்பி மீந்திருக்கிறவர்கள் மறுபடியும் கீழே வேர் பற்றி, மேலே கனி கொடுப்பார்கள் (II இரா. 19 : 30). இயேசு சொல்லும்போது; நான் தாவீதின் வேரும், சந்ததியும், பிரகாசமுள்ள விடிவெள்ளி நட்சத்திரமுமாயிருக்கிறேன் (வெளி. 22 : 16).

ஆயிரவருஷ அரசாட்சியில் அக்காலத்திலே ஜனங் களுக்கு கொடியாக நிற்கும் ஈசாயின் வேருக்காக ஜாதிகள் விசாரித்து கேட்பார்கள். அவருடைய தாபர ஸ்தலம் மகிமையாயிருக்கும் (ஏசா. 11 : 10). பிதாவின் கரத்திலே ஒரு புஸ்தகம் காணப்பட்டது. ஒருவனும் அந்தப் புஸ்தகத்தைத் திறக்கவும், வாசிக்கவும், அதைப் பார்க்கவும்

பாத்திரவானாகக் காணப்படாததினால் நான் மிகவும் அழுதேன். அப்பொழுது மூப்பர்களில் ஒருவன் என்னை நோக்கி; நீ அழவேண்டாம். இதோ, யூதா கோத்திரத்து சிங்கமும் தாவீதின் வேருமானவர் புஸ்தகத்தைத் திறக்கவும், அதின் ஏழு முத்திரைகளை உடைக்கவும் ஜெயம் கொண்டிருக்கிறார் என்றான் (வெளி. 5 : 4, 5). இயேசுவின் வேர் மகா பரிசுத்தமானது; அது அசையாது. இயேசுவின் வேரில் கனி குறையாது. அதில் கனி பெருகிக்கொண்டிருக்கும். அது நித்திய காலமும் நிலை கொண்டிருக்கும்.

பொய்யின் கனி

சாத்தானும் பொய்யின் கனியைக் கொடுப்பான். பாவ இச்சைகள் மரணத்திற்கேதுவான கனிகளைக் கொடுக்கத்தக்கதாக நம்முடைய அவயவயங்களில் பலன் செய்தது (ரோ. 7 : 5). பாவத்தின் கனி எவ்வளவு பயங்கரமாயிருக்கிறது? ஆதாம், ஏவாள் விலக்கப்பட்ட மரத்தின் கனியைப் புசித்தபோது, மகிமை அவர்களை விட்டு விலகிப்போயிற்று. நிர்வாணிகளாய் மாறிவிட்டார்கள். கர்த்தர் வரும்போது, பயந்து ஒளித்துக்கொண்டார்கள். கசப்பான கனிகள், புளிப்பான கனிகள் இவையெல்லாம் சாத்தானால் உண்டானவை. சாத்தான் மனிதனை வஞ்சிக்கிறான். அவன் பொய்யனாயிருக்கிறான். அவன் மனுஷ கொலைபாதகனாயிருக்கிறான். அவன் முடிவிலே அக்கினி கடலிலே தள்ளப்படுகிறான்.

இயேசு குறிப்பிடுகிறார்: நல்ல கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும். அக்கினி என்று கூறும்போது, நரகத்தில் தள்ளப்படுவதைக் குறிக்கிறது. நித்தியகால அக்கினி எவ்வளவு பயங்கர மாயிருக்கிறது. இயேசு ஒரு அத்திமரத்தைப் பார்த்து, இலைகளேயன்றி வேறொன்றும் காணப்படவில்லை. இனி ஒருக்காலும் கனி உண்டாகாது என்று சொன்னார். அந்த அத்திமரம் உடனே பட்டுப்போயிற்று (மத். 21 : 19).

கர்த்தருடையப் பார்வையில் நியாயத்தை நஞ்சாகவும், நீதியின் கனியை எட்டியாகவும் மாற்றினீர்கள் (ஆமோ. 6 : 12). நல்ல கனியை கசப்பாக மாற்றுகிறார்கள். ஒரு கூட்டம் மக்கள் கோராக் எதிர்த்துப் பேசின பாவத்திற்குள்ளாகி, கெட்டுப்போகிறார்கள். இவர்கள் காற்றுகளால் அடி யுண்டோடுகிற தண்ணீரற்ற மேகங்களும், இலையுதிர்ந்து கனியற்று இரண்டு தரம் செத்து வேரற்றுப்போன மரங்களும், இந்த நிலவரங்கள் எவ்வளவு பயங்கரமாயிருக்கிறது!

நற்கனி

நாம் இந்தக் காலத்தில் நல்ல கனியைக் கொடுத்து, கர்த்தரை சந்தோஷப்படுத்த வேண்டும். நம்முடைய கனி மற்ற ஆத்துமாக்களையும் சந்தோஷப்படுத்த வேண்டும். அப்போது பரிசுத்த ஜீவியத்தில் முன்னேறி போகலாம்.

நமது நாட்கள் எண்ணப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு நாளும் கடந்து செல்ல செல்ல நம் வாழ்நாள் குறைந்து கொண்டுவருகிறது. கர்த்தர் கிருபையாய் தந்திருக்கும் நாட்களை நாம் நற்கிரியைகளை செய்து, நல்ல கனிகளைக் கொடுத்து பயனுள்ள ஜீவியம் செய்வோமாக.

இவ்விதமாய் மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும் படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக் கடவது (மத். 5 : 16).

கர்த்தருக்கும், பிறருக்கும் நற்கனிகளைக் கொடுத்து ஜீவிக்க நம்மை அர்ப்பணம் செய்வோமாக.

xxxxx

***"என் நேசர் தம்முடைய தோட்டத்துக்கு வந்து, தமது அருமையான கனிகளை புசிப்பாராக."* (உன். 4 : 16)**

எமது இதர வெளியீடுகள்

- நிழலும பொருளும் - ஈசாக்கும் ரெபேக்காளும்
- உத்தமி
- மகிமை அடைந்த எருசலேம்
- ஆபிரகாமின் விசுவாசம்
- பிரதிபலன்
- கர்த்தருடைய வருகையில் எடுத்துக்கொள்ளப்பட என்னென்ன தகுதிகள் வேண்டும்
- நித்திய ஜீவன் பெறுதல்
- தேவ சித்தம் செய்தல்
- என் புறாவே!
- ஆத்தும இளைப்பாறுதல்
- தேவ ஆசீர்வாதம்
- சபையாகிய திராட்சைத் தோட்டம்
- இயேசுவின் இரத்தம்

புத்தகங்கள் கிடைக்குமிடம்

FULL GOSPEL LITERATURE SERVICE CENTRE

H.O. - Kadamalaikuntu

P.B. No. 3, Mekkamandapam, K.K.Dist. - 629 166.

Ph.: (04651) 252756 / 252856

(or)

Pastor J. Lazer

Full Gospel Pentecostal Church

Theruvilai, Mathoor,

Aruvikkarai P.O., K.K.Dist. - 629 177.

Ph.: (04651) 283144

ஆசிரியரைப் பற்றி . . .

பாஸ்டர் J. லாசர் அவர்கள் 1923-ம் வருடம் டிசம்பர் மாதம் 17-ம் நாள் கிறிஸ்தவப் பெற்றோருக்கு பிறந்தார். இவரது சொந்த ஊர் மாத்தூர் ஆகும். 12 வயதிலே கர்த்தர் தரிசனமாகி இவரை ஊழியத்திற்கு அழைத்தார்.

60 வருடங்களாக இந்தியாவின் பல பகுதிகளுக்கு சென்று கர்த்தருடைய ஊழியத்தை செய்துவருகிறார். வேதத்தில் மறைந்திருக்கிற பல சத்தியங்களையும் கர்த்தர் இவருக்கு வெளிப்படுத்திக் கொடுத்திருக்கிறார்.

இவரது போதனைகளைக் கேட்ட பலர் இவைகளை புத்தகங்களாக வெளியிட்டால், அநேகருக்கு பிரயோஜனமாக இருக்கும் என்று கேட்டுக்கொண்டதால் **அருமையான கனிகள்** என்ற இந்த சிறுநூல் வெளியிடப்படுகிறது. இது படிக்கிற யாவருக்கும் ஆசீர்வாதமாக இருக்க கர்த்தர் கிருபை செய்வாராக.